

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (18.6.2025) முகாம் அலுவலகத்தில், தமிழ்நாடு அரசின் ஏழாவது மாநில நிதி ஆணையத்தின் தலைவர் கே.அலாவுதீன் சந்தித்து. தனது மகன் திருமண விழாவிற்கான அழைப்பிதழை வழங்கினார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (18.6.2025) தலைமைச் செயலகத்தில், வணிகவரி மற்றும் பதிவுத்துறையின் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், பொதுப்பணித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, வணிகவரி மற்றும் பதிவுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் (பொறுப்பு) திருமதி காகர்லா உஷா,நிதித்துறை முதன்மைச் செயலாளர் த. உதயச்சந்திரன், வணிகவரி ஆணையர் முனைவர் டி. ஜகந்நாதன், பதிவுத்துறை தலைவர் தினேஷ் ஆலிவர் பொன்ராஜ், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



ஏரல் பேரூர் கழக இளைஞர் அணி அமைப்பாளர் ஆனந்த் – பவித்ரா ஆகியோரது திருமணம் சமீபத்தில் நடைபெற்றதையொட்டி அவர்கள் இல்லத்திற்கு தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி நேரில் சென்று வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டார். உடன் மீன்வளம் மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், ஒட்டப்பிடாரம் சட்டமன்ற உறுப்பினர் எம்.சி.சண்முகையா, தூத்துக்குடி மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி, மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் எஸ்.ஆர்.எஸ்.உமரி சங்கர், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் பை.மூ. ராமஜெயம், திருச்செந்தூர் ஒன்றிய செயலாளர் ஏ.பி.ரமேஷ், நகர செயலாளர் வாள் சுடலை, காயல்பட்டினம் நகர் மன்றத் தலைவர் முத்து முஹம்மது உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# ஆர்.எஸ்.தம்பி குடும்பத்திற்கு இளைஞர் அணி நிதி உதவி!

## அமைச்சர் மு.பெ.சாமிநாதன் வழங்கினார்!



ஈரோடு, ஜூன் 19-

கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்கள் கழக இளைஞர் அணி செயலாளராக இருந்தபோது, ஈரோடு நகர இளைஞர் அணி அமைப்பாளராக ஆர்.எஸ்.தம்பி கழகத் தலைவர் தலைமையில் திருமணம் செய்தவர், கழகத் தலைவர் அவர்களை அழைத்து நிகழ்ச்சிகள் நடத்தியவர் என ஈரோட்டில் இளைஞர் அணியை வளர்க்க பாடுபட்டவரான ஆர்.எஸ்.தம்பி, சமீபத்தில் உடல் நலக்குறைவால் மறைவெய்தினார்.

இந்த நிலையில், அவரது குடும்பத்தினருக்கு கழக இளைஞர் அணி அறக்கட்டளை சார்பில் ரூ.50,000 நிதி உதவியாக வழங்க இளைஞர் அணி செயலாளரும், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அறிவுறுத்தியிருந்தார்.

அதன்படி, ஈரோடு மாநகரக் கழகச் செயலாளர் மு.சுப்பிரமணியம், இளைஞர் அணி துணைச் செயலாளர் கே.இ.பிரகாஷ் எம்.பி. ஆகியோர் முன்னிலையில், அமைச்சர் மு.பெ.சாமிநாதன், ஆர்.எஸ். தம்பி குடும்பத்தாரிடம் நிதியை வழங்கினார்.

ஊத்துக்குளி மத்திய ஒன்றிய செயலாளர் ராஜா, இளைஞர் அணியின் ஈரோடு தெற்கு மாவட்ட அமைப்பாளர் திருவாசகம், ஈரோடு மாநகர அமைப்பாளர் சேந்தபுகழன், முன்னாள் மாவட்ட அமைப்பாளர் பி.கே.பழனிசாமி மற்றும் இளைஞர் அணி பகுதி அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் உடனிருந்தனர்.

### பழனி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலில்

# பக்தர்கள் வசதிக்காக இரண்டு மின்கல சிற்றுந்துகள்!

## அமைச்சர் அர.சக்கரபாணி தொடங்கி வைத்தார்!

திண்டுக்கல். ஜூன் 19-

அமைச்சர் அர.சக்கரபாணி, பழனி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலில், பக்தர்கள் வசதிக்காக இரண்டு மின்கல சிற்றுந்துகள் இயக்கத்தை தொடங்கி வைத்து, பூஜை விவரங்கள் குறித்த மின்னணு திரையை (LED DISPLAY BOARD) திறந்து வைத்தார்.

பழனி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலுக்கு வருகை தரும் முதியோர்கள், குழந்தைகள், மாற்றுத் திறனாளிகள் மற்றும் பக்தர்கள் எளிதாக மின் இழுவை இரயில் நிலையம், படிப்பாதை, கம்பிவட ஊர்தி நிலையம், சுற்றுலா பேருந்து நிலையம் ஆகிய இடங்களுக்கு சிரமமின்றி செல்வதற்காக கிரிவீதியில் திருக்கோயில் நிர்வாகம் சார்பில் தலா 11 இருக்கைகள் கொண்ட மின்கல கார்கள் 17 எண்ணிக்கையிலும், தலா 23 இருக்கைகள் கொண்ட மின்கல மினி பேருந்து 10 எண்ணிக்கையிலும், டீசல் மினி பேருந்து 2 எண்ணிக்கையிலும் என ஆகமொத்தம் 29 வாகனங்கள் இயக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், கண்ணன் இரும்பு எஃகு நிறுவன (Kannappan iron and steel company pvt Ltd.. (Kiscol)) நிறுவனத்தின் உரிமையாளர் பி.எஸ்.டி.கண்ணப்பன் மற்றும் தமிழ்நாடு மெர்க்கண்டையல் வங்கி (Tamil nadu Mercantile Bank) மதுரை மண்டல துணை பொது மேலாளர் டி.கண்ணன் ஆகியோர் பக்தர்களின் வசதிக்காக 23 இருக்கைகள் கொண்ட மின்கல சிற்றுந்து தலா ஒன்று வீதம் இரண்டு வாகனங்களை திருக்கோயில் நிர்வாகத்திற்கு உபயமாக வழங்கியுள்ளனர்.

இந்த வாகனங்கள் இயக்கம் பக்தர்களின் பயன்பாட்டிற்காக உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி அவர்களால் இன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ளன. இதன்மூலம் கிரிவீதியில் பக்தர்களின் வசதிக்காக கட்டணமில்லாமல் பயன்படுத்தப்படும் வாகனங்களின் எண்ணிக்கை 31 ஆக உயர்ந்துள்ளது.

மேலும், இத்திருக்கோயிலுக்கு வருகை தரும் பக்தர்களுக்கு தமிழ்நாடு அரசின் இந்து சமய அறநிலையத்துறையின் செயல்பாடுகள் குறித்த விவரங்கள்.

இத்திருக்கோயில் தொடர்பான விவரங்கள், கட்டணமில்லா சேவைகள் மற்றும் கட்டண சேவைகள் குறித்து திருக்கோயிலின் மலைக்கோயிலுக்கு பக்தர்கள் செல்லும் படிப்பாதை அடிவாரத்தில் உள்ள பாத விநாயகர் திருக்கோயில் அருகில் 20 அடி நீளம், 10 அடி அகலம் என்ற அளவில் புதியதாக மின்னணு திரை (LED DISPLAY BOARD) திருப்பூரை சேர்ந்த M/s.கேட்ஸ் வேர்ஸ் நிறு வனத்தின் உரிமையாளர் க.ஜெயகுமார் மற்றும் குடும்பத்தி னரால் உபயமாக வழங்கப்பட்டு ரூ.20.00 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு பக்தர்களின் பயன்பாட்டிற்காக உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி திறந்து வைத்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், அறங்காவலர் குழு தலைவர், அறங்காவலர் குழு உறுப்பினர்கள், இணை ஆணையர் / செயல் அலுவலர், துணை ஆணையர், உதவி ஆணையர், திருக்கோயில் பணியாளர்கள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் மற்றும் பக்தர்கள் கலந்து கொண்டனர்.





கழகத் தலைவர், முதலமைச்சர் தளபதியார் அவர்களின் ஆணைக்கிணங்க, விழுப்புரம் மத்திய மாவட்ட கழக பொறுப்பாளரும், விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினருமான டாக்டர் இரா.இலட்சுமணன் விழுப்புரம் சட்டமன்ற தொகுதி, காணை கிழக்கு ஒன்றிய செயல்வீரர்கள் ஆலோசனை கூட்டத்தில் கலந்துகொண்டு ஆலோசனை வழங்கினார். உடன் மாவட்ட பொருளாளர் இரா.ஜனகராஜ், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணை செயலாளர் செ.புஷ்பராஜ், காணை கிழக்கு ஒன்றிய கழக பொறுப்பாளர் கொத்தமங்கலம் B.சந்திரசேகர், காணை ஒன்றிய குழு பெருந்தலைவர் கலைச்செல்வி, மாவட்ட விவசாய அணி துணை தலைவர் சுந்தரமூர்த்தி, மாவட்ட பிரதிநிதி செல்வம், ஒன்றிய துணை செயலாளர் செல்வராஜ், வெண்மணியாத்தூர் பாபு, ஒன்றிய கவுன்சிலர்கள் தேவபூஷணம் முருகன், ஜெயா குமரன், ஊராட்சி மன்ற தலைவர்கள் ரமணன், சிவசங்கர், அறிவழகன், கிளை கழக செயலாளர்கள் முருகதாஸ், ராஜேந்திரன், தேவன், ஜெயக்கொடி, ராஜேந்திரன், ராஜேஷ், ஆரோக்கியதாஸ், ஹரி கிருஷ்ணன், செந்தில், மகளிர் அணி நிர்வாகிகள் அமுதா முருகன், சுமதி மற்றும் மாவட்ட, ஒன்றிய, கிளை கழக நிர்வாகிகள், சார்பு அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### விழுப்புரம் தெற்கு மாவட்டத்தில்

# பாக முகவர்கள் (BLA 2), பாக BDA முகவர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர்.பொன்.கௌதமசிகாமணி அறிவிப்பு!

விழுப்புரம், ஜூன் 19-



விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் பொன். கௌதமசிகாமணி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, துணை முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின் படி, முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி எம்.எல்.ஏ அவர்களின் ஆலோசனைக் கிணங்க விழுப்புரம் தெற்கு மாவட்ட ஒன்றிய, நகர, பேரூர் வாரியாக கிளை செயலாளர்கள், பாக முகவர்கள் (BLA 2), பாக BDA முகவர்கள் ஆலோசனைக் கூட்டம் கீழ்க்கண்டவாறு நடைபெறுகிறது.


இன்று (19.6.2025 - வியாழக்கிழமை) முகையூர் வடக்கு ஒன்றியம், காலை 10 மணி அளவில் ஆலம்பாடி சீனிவாச திருமண மண்டபத்திலும், முகையூர் தெற்கு ஒன்றியம் மாலை 03.00 மணி அளவில் முகையூர் புனித மகிமை மாதா சேவியர் திருமண மண்டபத்திலும், மணம்பூண்டி / அரகண்டநல்லூர் பேரூராட்சி மாலை 6.00 மணி அரங்கண்டநல்லூர் ஜே.பி திருமண மண்டபத்திலும் மற்றும் இன்று (19.06.2025 -வியாழக்கிழமை) காலை 10.00 மணி அளவில், காணை (தெற்கு, வடக்கு, மத்திய) ஒன்றியங்கள் கெடார் வெற்றி திருமண மண்டபத்திலும், காலை 11.30 கோலியனூர் மேற்கு ஒன்றியம், திருவாமாத்தூர் SSK.திருமண மண்டபத்திலும், மாலை 5.00 மணி அளவில், விக்கிர வாண்டி (கிழக்கு,மேற்கு, மத்திய) ஒன்றியங்கள் பனப்பாக்கம் விக்கிரவாண்டி டோல் கேட் அருகில் உள்ள ஜெயஸ்ரீ திருமண மண்டபத்திலும், மாலை 6.30 மணி அளவில் விக்கிரவாண்டி பேரூராட்சி பேரூர் கழக அலுவலகத்திலும், திருக்கோவிலூர் நகரம் 21.06. 2025 சனிக்கிழமை காலை 10.00 மணி அளவில் தேவி முருகன் திருமண மண்டபத்திலும் நடைபெறுகிறது. இக்கூட்டத்திற்கு ஒன்றிய , நகர, பேரூர் கழக செயலாளர்கள் சிறப்பாக ஏற்பாடு செய்திடுமாறும், அனைவரும் பெருந்திரளாக கலந்து கொள்ளுமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மா.பா. சாரதி

### ஜூன் 19 (1976)



வடாற்காடு மாவட்டக் கழக முன்னோடிகளில் ஒருவராகவும் – மாவட்ட அவைத்தலைவராகவும் பணிபுரிந்தவர்.

வேலூர் நகர்மன்றத்தில் இருபது ஆண்டு காலமாக உறுப்பினராகவும், மூன்று முறை நகராட்சித் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்புறப் பணியாற்றியவர்.

தமிழக சட்டப்பேரவைக்கு இரண்டு முறை தேர்ந்தெடுக்கப்பட்டு பத்தாண்டு காலம் சட்டமன்றப் பணிகளை செவ்வனே ஆற்றி, தாம் தேர்ந்தெடுக்கப்பட்ட தொகுதி மக்களுக்காக பேரவையில் வாதாடி, குறைபாடுகளை நிவர்த்தி செய்தவர்.

“பெயரால், புகழால், வல்லமையால், செல்வாக்கால், உருவத்தால் யானையென அவர் இருந்தாலும், கழகத்தின் கட்டளையெனும் அங்குசத்துக்கு அடங்கியன்றோ பணி குவித்தார்” என தலைவர் கலைஞர் அவர்களால் புகழ்ந்துரைக்கப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**